# 4

# குற்றவியல் மற்றும் குடும்பச் சட்டம்

TML 004

ஒன்ராறியோவில் பெண்களுக்குரிய குடும்பச் சட்டம்



## எல்லோரும் பெண்கள்.
## ஒரே குடும்பச் சட்டம்.

அறியுங்கள் உங்கள் உரிமைகளை.

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

# குற்றவியல் மற்றும் குடும்பச் சட்டம்

*இந்த சிறுநூல் சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அடிப்படையான ஒரு விளக்கத்தை உங்களுக்குத் தரும் நோக்கத்துடன் வரையப்பட்டு உள்ளது. தனிப்பட்ட முறையிலான சட்ட ஆலோசனை மற்றும் உதவி என்பவற்றுக்கு இணையான ஒரு மாற்றீடாக இதனைக் கருத முடியாது. குடும்பச் சட்டம் தொடர்பிலான பிரச்சினைகளை நீங்கள் எதிர்கொள்ளும் பொழுது உங்கள் உரிமைகளைக் காப்பதற்காக, உங்களால் முடிந்த அளவு விரைவாக சட்ட ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள். குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரைக் கண்டுபிடித்து அவருக்குக் கட்டணமாக பணம் செலுத்துவது எப்படி என்பது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற எமது இணையத் தளத்தில் காணப்படும் "குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல்" என்ற சிறுநூலைப் படியுங்கள்.*

கனடாவில் பெண்கள் வன்முறையை ஒவ்வொரு நாளும் சந்திக்கின்றனர். உடல்ரீதியாக, பாலியல்ரீதியாக, உணர்வுரீதியாக, உளரீதியாக மற்றும் பொருளாதாரரீதியாக ஒருவர் துர்ப்பிரயோகத்துக்கு உள்ளாவதும் வன்முறையில் அடங்கும். துர்ப்பிரயோகம் (abuse) இடம்பெறுதற்குக் காரணம் துர்ப்பிரயோகம் செய்பவர் அதனால் பாதிக்கப்படுபவர் மீது தமது அதிகாரத்தையும் கட்டுப்பாட்டையும் பிரயோகிக்க விரும்புகிறார். துர்ப்பிரயோகம் நடைபெறுவது உங்களின் தவறல்ல. துர்ப்பிரயோகத்துக்கு நீங்கள் காரணமாக இருக்கவில்லை.

## என்ன வகையான துர்ப்பிரயோகங்கள் சட்டத்துக்கு முரணானவை எனக் கருதப்படுகின்றன?

கனடாவில் துர்ப்பிரயோகங்களில் பல வகையானவை குற்றங்களாகக் கருதப்படுகின்றன. துர்ப்பிரயோகத்தில் மிகச் சாதாரணமாக இடம்பெறும் வகைகள் கீழே தரப்பட்டு உள்ளன:

**பின்தொடர்தல்** (Stalking) என்பது உங்களைப் பயமுறுத்துவதற்காகத் துர்ப்பிரயோகம் செய்யும் ஒருவர் பலவகைச்செயல்களில் ஈடுபடுதல் ஆகும். துர்ப்பிரயோகம் செய்பவர் உங்களை உடல்ரீதியாகத் துன்புறுத்தாத போதிலும் அது ஒரு குற்றச் செயலாகக் கருதப்படுகிறது. கனேடிய *குற்றவியல் சட்டக் கோவையில்* **பின்தொடர்தல்** என்பது **குற்றவியல் ரீதியிலான துன்புறுத்தல்** என அழைக்கப்படுகிறது. பின்வரும் செயல்களைச் செய்யும் ஒருவர் பின்தொடர்தல் செயலில் ஈடுபடுகிறார் எனக் கருதலாம்:

- உங்களைக் கவனித்தவாறு உங்களைப் பின் தொடருகிறார்.
- நீங்கள் விரும்பாதபோதும் உங்களுக்குப் பரிசுப் பொருட்களை அனுப்புகிறார்.
- உங்கள் உடைமைகளுக்குச் சேதம் விளைவிக்கிறார்.
- உங்களுடன் தொடர்பு கொள்ளுவதற்கு அல்லது நீங்கள் வேண்டாம் எனத் தடுத்தபோதிலும் தொடர்பு கொள்ளுவதற்கு முயற்சிக்கிறார்.
- நீங்கள் விரும்பாத செய்தி வாசகங்களை பெருமளவில் கடிதம் வழியாக அல்லது தொலைபேசிச் செய்தி அஞ்சலாக அல்லது மின்னஞ்சலாக அனுப்புகிறார்.
- உங்களுடன் தொடர்பு கொள்ள அல்லது மற்றவர்கள் மூலம் உங்களுக்குச் செய்திகள் அனுப்ப முயற்சிக்கிறார்.
- உங்களுக்கு அல்லது உங்கள் குடும்பத்துக்கு ஆபத்து விளைவிக்கப் போவதாகப் பயமுறுத்துகிறார்.
- இவற்றில் எதையாவது மின்கணினி வழியாகச் செய்கிறார்.

நீங்கள் பின்தொடர்தல் செய்கைக்கு ஆளாக நேர்ந்தால் அவ்வாறு பின்தொடரும் நபருடன் ஏற்படும் நிகழ்வுகள் யாவற்றின் விபரங்களையும் ஒரு குறிப்பேட்டில் எழுதி வையுங்கள். பொலிஸ் காவல்துறையினரும் நீதிமன்றமும் உங்கள் கூற்றை ஏற்றுக்கொண்டு அவர் மீது குற்றம் சுமத்த முடியும் என நம்பவைக்க இவ்வாறான ஒரு பதிவேடு உதவுகிறது.

**தாக்குதல்** (Assault) என்பது ஒரு நபர் இன்னுமொரு நபரை உடல்ரீதியாக அடித்து வருத்துதல் ஆகுமநபரின் மீது வலிந்து விசையை உபயோகிப்பது அல்லது அவ்வாறு செய்ய முயற்சிப்பது அல்லது செய்யப்போவதாகப் பயமுறுத்துவது எனலாம். உடல்ரீதியாக உங்களுக்குக் காயம் ஏற்படாத போதிலும் தாக்குதல் ஒரு குற்றச் செயல் ஆகும். தாக்குதல் என்ற நிகழ்வின் கீழ் பின்வருவன அடங்கலாம்:

- வன்முறை செய்யப்போவதாக வாய் வார்த்தைகளால் பயமுறுத்தல்
- கன்னத்தில் அடித்தல்
- தள்ளுதல்
- உதைத்தல்
- கைமுட்டியால் குத்துதல்
- கூரான பொருளினால் குத்துதல்

**பாலியல் ரீதியில் தாக்குதல்** (Sexual Assault) என்பது நீங்கள் இணங்கி உடன்படாத ஒரு பாலியல் செய்கைக்கு அல்லது பாலியல் தொடுகைக்கு உங்களை உட்படுத்துதல். கனடாவில் உங்கள் கணவர் கூட பாலியல் ரீதியில் உங்களைத் தாக்கினால் அவர்மீது குற்றம் சுமத்தப்படுவதற்கு முடியும். உடல்ரீதியாக உங்களுக்குக் காயம் ஏற்படாதபோதிலும், பாலியல் ரீதியில் தாக்குதல் என்பது ஒரு குற்றமாகக் கருதப்படுகிறது. பாலியல் ரீதியிலான தாக்குதல் நிகழ்வின் கீழ் பின்வருவன அடங்கலாம்:

- நீங்கள் விரும்பாத ஒரு முத்தம்
- பாலியல் ரீதியில் தொடுதல்
- வலுக் கட்டாயமான உடலுறவு
- முன்கூறியவற்றுள் ஒன்றை அல்லது பிற பாலியல் முறைச் செயல்களை செய்யும்படி உங்களை நிர்ப்பந்தித்தல். இதில் சம்பந்தப்பட்டவர் உங்களைப் பயமுறுத்தி அல்லது மறுத்தால் உங்களுக்கு அல்லது நீங்கள் விரும்பும் ஒருவருக்கு ஏதாவது இடர் ஏற்படும் என்று சொல்லி உங்களை வற்புறுத்தக் கூடும்.

பின்தொடர்தல், தாக்குதல், அல்லது பாலியல் ரீதியில் தாக்குதல் என்ற எதனாலும் நீங்கள் பாதிக்கப்பட்டால் பொலிஸ் காவல்துறையினரை அழைக்கும் உரிமை உங்களுக்கு உண்டு.

கனடாவில், பொலிஸ் காவல்துறையினர் நீங்கள் உங்கள் வாழ்க்கைத்துணைவரால் தாக்கப்பட்டு உள்ளீர்கள் என ஒரு விசாரணையின் பின்னர் நம்பினால், நீங்கள் விரும்பாவிட்டாலும் அவர்மீது குற்றங்களைக் கட்டாயம் சுமத்துவார்கள். சிலவேளைகளில் பெண்கள் மீதும் தாக்குதல் தொடர்பாக குற்றம் சுமத்தப்படுதல் உண்டு. இதற்குக் காரணம் அவர்களைத் துர்ப்பிரயோகம் செய்தவர் தானும் தாக்குதலுக்கு உள்ளானதாகக் கூறுவதும் உண்டு.

கனடாவில் உணர்வுரீதியாகத் துர்ப்பிரயோகம் செய்வது குற்றமாகக் கருதப்படுவது இல்லை என்பதை அறிந்து வைத்தல் முக்கியம் ஆகும்.

## சட்டம் எவ்வாறு உதவமுடியும்

நீங்கள் பின்தொடரப்பட்டால், தாக்கப்பட்டால் அல்லது பாலியல் ரீதியில் தாக்கப்பட்டால் ஒருசில வழிகளில் நடவடிக்கை எடுக்கமுடியும். இவற்றில் நீங்கள் தெரிவு செய்யும் எந்த ஒரு வழியும் இலகுவாக அமையப் போவதில்லை. அத்துடன் எந்த ஒரு வழியும் நிச்சயமாகப் பலன் தரும் என்றும் கூறமுடியாது. உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் பாதுகாப்பாக வைத்திருப்பதே உங்கள் முதல் எண்ணமாக இருக்க வேண்டும். சட்டம் உங்களுக்கு உதவக்கூடிய மூன்று வழிகள் கீழே தரப்பட்டு உள்ளன:

### 1. குடும்ப நீதிமன்றத்தின் உத்தரவு ஒன்றினைப் பெற்றெடுங்கள்

நீங்கள் பயமுறுத்தப்பட்டால் அல்லது துர்ப்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டால் குடும்ப நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்து அதன்மூலம் ஒரு **தடையுத்தரவு** (restraining order) அல்லது **குடும்ப இல்லத்தினை பிரத்தியேக உபயோகத்தில் வைத்திருக்கும் உத்தரவு** (exclusive possession of the family home) பெறுவதற்கு முடியும்.

**தடையுத்தரவுகள்**

உங்கள் வாழ்க்கைத்துணை (spouse), பொதுச் சட்டத்தின் கீழ் கூடிவாழ்ந்த துணைவர் (common-law partner), முந்திய வாழ்க்கைத்துணை அல்லது முந்திய துணைவர் என்பவர்களுக்கு எதிராக ஒரு தடையுத்தரவு பெறுவதற்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம். ஒரு தடையுத்தரவு அவர்கள் செய்யக் கூடிய விடயங்களைக் கட்டுப்படுத்துகிறது. அந்த உத்தரவில் உங்களைத் துர்ப்பிரயோகம் செய்பவர் உங்களுடன் அல்லது உங்கள் குடும்பத்துடன் தொடர்பு கொள்ளக்கூடாது என்று அல்லது அதற்கு முயற்சிகூடச் செய்யக்கூடாது என்று விதிக்கப்படலாம். உங்களிடம் இருந்து அவர் அகன்று வாழவேண்டும் எனவும் எல்லா நேரங்களிலும் எவ்வளவு தூரத்துக்கு அப்பால் அவர் இருக்கவேண்டும் எனவும் அதில் விதிக்கப்படலாம். அவர் துப்பாக்கிகள் அல்லது பிற ஆயுதங்கள் வைத்திருக்கக் கூடாது எனவும் அந்த உத்தரவில் விதிக்கப்பட முடியும்.

*இதனைப் பெற எவ்வளவு நாளாகலாம்?*

குடும்ப நீதிமன்றத்தில் மிகப்பல வழக்குகள் நடைபெறும் காரணத்தால் ஒரு தடையுத்தரவை நீங்கள் பெற்றெடுக்கப் பல மாதங்கள் செல்லக்கூடும். நீங்கள் பயப்படுவதற்குத் தகுந்த காரணம் இருப்பதாக நீதிபதி நம்பினால் உங்களைத் துர்ப்பிரயோகம் செய்பவருக்கு எதிராக அவர் ஒரு தடையுத்தரவினை வழங்குவார். இந்த உத்தரவு குறித்த ஒரு காலத்துக்கு என்று அமையலாம் அல்லது இருக்கும் சூழ்நிலைகளைப் பொறுத்து காலவரையறை இல்லாமல் தொடரலாம்.

*அவசர நிலைமையின் கீழ் என்ன செய்வது*

நீங்களோ உங்கள் பிள்ளைகளோ உடனடியாகக் காயப்படும் சாத்தியம் மிகக் கூடுதலாக இருக்கும் என்றால், நீங்கள் மற்றைய கட்சிக்காரர் இல்லாத அடிப்படையில் *(ex parte)* இவ்வாறான ஓர் உத்தரவை வழங்கும்படி விண்ணப்பிக்க முடியும். இதன் அர்த்தம் என்னவெனில், உங்கள் துணைவர் சொல்லக் கூடிய எதையும் கேட்காமலேயே ஒரு தடையுத்தரவை உங்களுக்காக வழங்கும்படி நீங்கள் நீதிபதியைக் கேட்கிறீர்கள் என்பது ஆகும். இவ்வகையான ஒரு உத்தரவைப் பெறுவது கஷ்டம் என்பதுடன் அது வழக்கமாக குறுகிய ஒரு காலத்துக்கே வழங்கப்படும்.

*உங்களைத் துர்ப்பிரயோகம் செய்தவர் வழங்கப்பட்ட உத்தரவினுக்குக் கட்டுப்பட்டு நடக்காவிட்டால் என்ன நிகழும்?*

ஒரு தடையுத்தரவை மீறிநடப்பது மாகாணச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றமாக அமையும். ஆனாலும் இது குற்றவியல் ரீதியான குற்றச் செயல் அளவுக்குப் பாரதூரமான ஒன்றாக இருக்கமாட்டாது. உங்களை துர்ப்பிரயோகம் செய்தவர் உத்தரவை மீறி நடந்தால், அத்துடன் அவர்மீது குற்றச்சாட்டினை சுமத்துவதற்கு நீங்கள் விரும்பினால், அவரைப் பற்றி காவல்துறையினரிடம் முறைப்பாடு செய்யவேண்டி இருக்கும். காவல்துறையினர் அதுபற்றி ஒரு விசாரணை நடாத்துவர்.

**குடும்ப இல்லத்தினை பிரத்தியேக உபயோகத்தில் வைத்திருத்தல்**

நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணைவரும் திருமணம் செய்து இருந்தீர்கள் என்றால், நீங்கள் திருமண இல்லத்தினை **பிரத்தியேக உபயோகத்தில் வைத்திருக்கும்** உத்தரவு ஒன்றினை விதிக்கும்படி குடும்ப நீதிமன்றத்திடம் விண்ணப்பிக்க முடியும். இதன் அர்த்தம் என்னவென்றால் குறிப்பிட்ட உங்கள் இல்லத்துள் அதற்கு நீங்கள் உரிமையாளராக இருந்தாலும் வாடகைக்கு எடுத்து இருந்தாலும் உங்கள் வாழ்க்கைத் துணைவர் பிரவேசிக்க முடியாது. அதுமட்டுமன்றி, வீட்டின் பூட்டுகளையும் நீங்கள் மாற்றுவதற்கு முடியும். நீங்கள் வாடகைக்குக் குடியிருப்பவராக இருந்தால் பூட்டுகளை மாற்றமுன்பாக உங்கள் வீட்டு உரிமையாளருடன் அதுபற்றிக் கதையுங்கள்.

நீங்கள் பொதுச்சட்டத்தின் கீழான உறவில் வாழ்ந்து வந்தால் பிரத்தியேக உபயோகத்துக்கான ஒரு உத்தரவினைப் பெறுவது மேலும் கஷ்டமாக அமைந்து விடுகிறது. இந்த நிலையில் நீங்கள் பிள்ளை ஆதார உதவித் தொகை அல்லது வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகையையும் சேர்த்து உங்களுக்குத் தரும்படி நீதிமன்றத்திடம் கேட்கும் பொழுது மட்டுமே இவ்வித விண்ணப்பம் செய்யலாம்.

இல்லத்தினைப் பிரத்தியேக உபயோகத்தில் வைத்திருக்கும் உத்தரவு இருவரில் எவரினதும் சொத்து உரிமைகளை பாதிக்கப் போவதில்லை. உங்கள் துணைவர் வீட்டுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படாத போதிலும், அதன் பெறுமதியில் ஒரு பங்கினுக்கு அவர் தொடர்ந்தும் உரிமை கோரமுடியும்.

## 2. உங்களைத் துர்ப்பிரயோகம் செய்தவரை வெளிவிடுதற்கான வரையறைகளை அறியுங்கள்

உங்களைத் துர்ப்பிரயோகம் செய்தவர் பின்தொடருதல், தாக்குதல் அல்லது பாலியல் ரீதியில் தாக்குதல் செய்தார் எனக் குற்றம் சுமத்தப்படுவாரானால் அவரை பொலிஸ் காவல்துறையினர் வெளியே விடக்கூடும் அல்லது பிணைக்கான விசாரணை ஒன்று நடத்தவெனத் தடுத்து வைத்துக் கொள்ளவும் கூடும். இந்த விசாரணையின் பொழுது, அவரது வழக்கு விசாரணை நடைபெறும் வரையில் அவரைச் சிறையில் வைத்திருப்பதா அல்லது வெளியே விடுவதா என்று நீதிமன்றம் தீர்மானிக்கும். சிறைக்கு வெளியே அவர் அனுமதிக்கப்பட்டால் அவருக்கு நீதிமன்றம் **பிணை வழங்கி உள்ளது** என்று கூறப்படும்.

பிணை வழங்கப்படும் பெரும்பாலான துர்ப்பிரயோக நபர்கள் மிகவும் கண்டிப்பான நிபந்தனைகளைப் பின்பற்றி நடக்கவேண்டி இருக்கும். **வெளிவிடுதற்கான வரையறைகள்** (terms of release) அல்லது பிணை நிபந்தனைகள் என்று இவை அழைக்கப்படும். துர்ப்பிரயோக நபர் பொலிஸ் காவல்துறையினரால் வெளியே விடப்பட்டால் அப்பொழுதும் வெளிவிடுதற்கான வரையறைகள் விதிக்கப்பட்டு இருக்கும். துர்ப்பிரயோக நபர் அவரால் பாதிக்கப்பட்டவரிடம் இருந்து தூர விலகி இருத்தல் வேண்டும் என்று வெளிவிடுதற்கான வரையறைகளில் எப்பொழுதும் கூறப்பட்டு இருக்கும். வெளிவிடுதற்கான வரையறைகளில் பெரும்பாலும் துர்ப்பிரயோக நபர் பற்றிக் கூறப்படும் வேறு விடயங்கள் பின்வருமாறு இருக்கும். அவர்:

- குறிப்பிட்ட ஒரு நேரத்துக்கு முன்பாக வீடுவந்து சேர்ந்துவிட வேண்டும்
- மதுபானம் அல்லது போதைவஸ்து உட்கொள்ள அனுமதிக்கப்படுவது இல்லை
- சொந்தமாக அல்லது பிறவிதத்தில் துப்பாக்கிகளை வைத்திருக்க அனுமதிக்கப்படுவது இல்லை

- குறித்த ஒரு இடத்தில் மட்டுமே வசித்து வரவேண்டும்
- காவல்துறையினர் முன்பாகக் குறித்த கால இடைகளில் கிரமமாகத் தோன்றவேண்டும்
- ஒரு நீதிமன்ற உத்தரவின் மூலமாகவே அவர் பிள்ளைகள் சம்பந்தப்பட்ட அணுகல் உரிமையைப் பெறலாம்

*வெளிவிடுதற்கான வரையறைகள் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும்?*

பெரும்பாலானவர்களின் விடயத்தில் வழக்கு விசாரணை முடிவுற்று, சம்பந்தப்பட்ட எல்லாக் குற்றச் சாட்டுகள் பற்றியும் நடவடிக்கை எடுக்கப்படும் வரையில், நீதிமன்றம் இவ்வாறான வெளிவிடுதற்கான வரையறைகளை நீக்கமாட்டாது. சிலவேளைகளில் வழக்கு விசாரணை முடிவதற்கு முன்பாக நீதிமன்றம் வரையறைகளை மாற்றிவிடக் கூடும். உங்களிடம் இருந்து தூரவிலகி நிற்க வேண்டும் என்பது இவ்வரையறைகளில் ஒன்றாக இருக்குமானால், உங்கள் அனுமதியைப் பெறாமல் நீதிமன்றம் குறித்த அந்த வரையறையை அகற்றமாட்டாது.

*வெளிவிடுதற்கான வரையறைகள் குடும்ப நீதிமன்றத்தின் உத்தரவுடன் முரண்படுமானால் என்ன செய்வது?*

துர்ப்பிரயோக நபர் தனது பிள்ளைகளுடன் நேரத்தைக் கழிக்கும் உரிமையை கொண்டுள்ளார் என்று குடும்ப நீதிமன்ற உத்தரவில் கூறப்படக்கூடும். ஆனாலும் அவர் உங்களைத் தாக்கினார் என்று அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு இருக்குமானால், வெளிவிடுதற்கான வரையறைகளில் அவர் உங்களிடமிருந்தும் பிள்ளைகளிடம் இருந்தும் தூரவிலகி இருத்தல் வேண்டும் எனக் கூறப்படலாம். இவ்வாறு நிகழுமானால் என்ன செய்வது என்று தீர்மானிப்பது மிகவும் கஷ்டமாக அமையக் கூடும். முடிந்த அளவு விரைவில் **சட்ட ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.** தாக்குதல் தொடர்பான குற்றச்சாட்டினைக் கையாளும் நீதிபதி மற்றும் அரச சட்டத்தரணியிடம் குடும்ப நீதிமன்றம் விதித்துள்ள உத்தரவு பற்றிக் கூறுங்கள்.

*துர்ப்பிரயோக நபரினை யார் கண்காணித்து வருவார்?*

துர்ப்பிரயோக நபர் என்ன செய்கிறார் என்று கண்காணிப்பதற்கு யாராவது ஒருவர் இருக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்மானிக்கக் கூடும். இந்த மனிதர் **உத்தரவாதி** (surety) என்று அழைக்கப்படுகிறார். துர்ப்பிரயோக நபரினை வெளியே விடுதற்கு முன்பு உத்தரவாதி ஒரு பணத் தொகையை வைப்புப் பணமாக செலுத்த வேண்டி இருக்கலாம். துர்ப்பிரயோக நபர் வெளிவிடுதற்கான வரையறைகளை அவர் தொடர்பாக மீறினால் உத்தரவாதி அதுபற்றிப் பொலிஸ் காவல்துறையினரிடம் தெரிவிக்க வேண்டும். உங்களை துர்ப்பிரயோகம் செய்தவர் அவரது வெளிவிடுதற்கான வரையறைகளை உங்கள் தொடர்பாக மீறினால் அதுபற்றி நீங்கள் பொலிஸ் காவல்துறையினருக்கு அறிவிக்கவேண்டும் உத்தரவாதி அல்ல.

*உங்களை துர்ப்பிரயோகம் செய்தவர் வெளிவிடுதற்கான வரையறைகளுக்குப் பணியாது விட்டால் என்ன நிகழும்?*

குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் தனது வெளிவிடுதற்கான வரையறைகளில் எதனையாவது பின்பற்றத் தவறினால் அவர் மீது புதிய ஒரு குற்றவியல் குற்றச்சாட்டு சுமத்தப்படும். ஆரம்ப குற்றத்தினால் எழுந்த குற்றச் சாட்டுகளுடன் இப்புதிய குற்றச் சாட்டும் மேலதிகமாகச் சேர்க்கப்படும்.

குற்றம் சாட்டப்பட்ட மனிதர் வெளிவிடுதற்கான அவரது வரையறைகளை தொடர்ந்து மீறி வருகிறார் என்றால், அவரது பிணை ஏற்பாடு நிறுத்தப்பட வேண்டும் என்று நீதிமன்றம் தீர்மானிக்க முடியும். இப்படியான நிலைமையில் அவரது வழக்கு விசாரணை முடிவுறும் வரையில் அவர் சிறைச் சாலையில் வைக்கப்படுவார். அவர் உங்களுக்கு உடற்தீங்கு ஏற்படுத்தத் திட்டமிடுவது போன்ற எதையும் செய்தார் – உதாரணமாகத் துவக்கு ஒன்றினை வாங்கியுள்ளார் – எனக் கண்டாலும் நீதிமன்றம் அவரைச் சிறைச்சாலையில் வைத்திருக்கக் கூடும்.

**3. சமாதானக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் ஒன்றினைப் பெற்றெடுங்கள்**

நீங்கள் பயமுறுத்தப்பட்டு அல்லது தாக்கப்பட்டு இருந்தால் உங்களால் **சமாதானக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம்** (peace bond) ஒன்றினைப் பெற்றுக்கொள்ள முடியும். உங்களைத் துர்ப்பிரயோகம் செய்பவர் உங்களுக்குச் சொந்தமான எதனையும் தாக்குவதாகப் பயமுறுத்தினால் அல்லது தாக்கினால் நீங்கள் சமாதானக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் ஒன்றிற்கு விண்ணப்பிக்கலாம். துர்ப்பிரயோகம் செய்பவர் நீங்கள், உங்கள் குடும்பம், உங்கள் சொத்து என்பவற்றில் இருந்து ஒரு வருடகாலம் வரையில் கட்டாயமாக ஒதுங்கி இருக்கவேண்டும் என்று ஒரு சமாதானக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் சொல்லும். சமாதானக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் செய்வது குற்றவியல் குற்றச்சாட்டாக இருப்பதில்லை. ஆனால் அப்படியான ஒரு ஒப்பந்தத்தை மீறுவது ஒரு குற்றமாக அமையும்.

*எப்பொழுது ஒரு சமாதானக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தை உபயோகிக்கலாம்*

பொலிஸ் காவல்துறையினரை உங்கள் விடயத்தில் சம்பந்தப்படுத்த நீங்கள் விரும்பாவிட்டால், அல்லது துர்ப்பிரயோகம் பற்றி நீங்கள் அவர்களுக்குச் சொல்லி இருந்தும் அவர்கள் குற்றச்சாட்டு எதனையும் சுமத்தாமல் விட்டால் சமாதானக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் செய்வது ஒரு பிரயோசனமான செயலாக இருக்கும்.

*சமாதானக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் ஒன்றினை எப்படிப் பெறுவது*

சமாதானக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் ஒன்றினைப் பெறுவதற்கு நீங்கள் **சமாதான நீதிபதி** (Justice of the Peace – JP) ஒருவருடன் கதைக்கவேண்டும். நீங்கள் உண்மையையே சொல்லப்போவதாகச் சத்தியப் பிரமாணம் செய்யவேண்டும். அதன்பின் உங்கள் துர்ப்பிரயோக நபர் பற்றி ஏன் நீங்கள் பயப்படுகிறீர்கள் என்று சமாதான நீதிபதியிடம் நீங்கள் கூறவேண்டும். சமாதான நீதிபதி உங்களை துர்ப்பிரயோகம் செய்தவரிடம், சமாதான கட்டுப்பாட்டு ஒப்பந்தம் ஒன்றினைப் பெறுதற்காக ஒரு விசாரணையை நடாத்தும்படி நீங்கள் கேட்டு இருப்பதாகக் கூறுவார், உங்களைத் துர்ப்பிரயோகம் செய்தவர் விசாரணைக்குச் சென்று சாட்சியம் கொடுக்க முடியும். சமாதான நீதிபதி உங்கள் இருவரின் கூற்றுகளையும் கேட்டபின் என்ன செய்வதென முடிவு எடுப்பார். அதன்பின் நடப்பவை பின்வருமாறு அமையலாம்:

- நீங்கள் பயப்படுவதற்குத் தகுந்த காரணம் இருப்பதாக சமாதான நீதிபதி நம்பினால் அவர் உங்கள் துர்ப்பிரயோக நபரிடம் சமாதான ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பம் இடும்படி உத்தரவு இடுவார். நீங்கள், உங்கள் குடும்பம், உங்கள் சொத்து ஆகியவற்றில் இருந்து ஒரு வருடகாலம் வரையில் அவர் விலகி இருக்கும்படி அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டு இருக்கும்.

- உங்களில் யாரை நம்புவது என்று சமாதான நீதிபதியால் கூறமுடியாது இருக்கும்பொழுது, அல்லது நீங்கள் இருவருமே இருக்கும் நிலைமைக்குக் காரணமாக இருப்பதாக அவர் கருதினால், அவர் உங்கள் விண்ணப்பத்தை நிராகரித்து விடக்கூடும். அல்லது **இருபக்கச் சமாதானக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம்** (mutual peace bond) ஒன்றினைச் செய்யும்படி உத்தரவு இடக் கூடும். இதன் அர்த்தம் நீங்கள் இருவருமே ஒருவரிலிருந்து ஒருவர் விலகி நிற்கவேண்டும் என்பதாகும். ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளதை நீங்கள் பின்பற்ற உறுதி மொழி அளிப்பதாகச் சொல்லி நீங்கள் அதில் கையொப்பம் இடுதல் வேண்டும்.

**கவனமாக இருங்கள்:** இருபக்கச்சமாதான ஒப்பந்தம் ஒன்றுக்கு இணங்குதற்கு முன்பாகச் சட்டத்தரணி ஒருவருடன் அதுபற்றிக் கதையுங்கள். சில துர்ப்பிரயோக ஆண்கள் ஒரு பெண்ணைத் தொடர்ந்து கட்டுப்படுத்தவும் தொல்லைப்படுத்தவும் செய்யும் ஒரு வழியாக இருபக்கச் சமாதானக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தைப் பயன்படுத்துகின்றனர். உதாரணமாக, அவர் உங்களை ஏமாற்றி நீங்கள் அவரை நெருங்கும்படி வைத்துவிட்டு, பொலிஸ் காவல்துறையினரை அழைத்து சட்ட உத்தரவினை நீங்கள் மீறியதாக உங்கள் மீது குற்றச்சாட்டு விழும்படி செய்யக் கூடும்.

சமாதானக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்துக்கு மேலும் நிபந்தனைகளைச் சேர்க்கும்படி சமாதான நீதிபதியை நீங்கள் கேட்க முடியும். உதாரணமாக, உங்கள் துர்ப்பிரயோக நபர் உங்கள் வேலைத்தலத்துக்கு அருகில் வரக்கூடாது என்று சமாதானக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தில் கூறும்படி நீங்கள் கேட்கலாம்.

சமாதானக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் ஒன்று கிடைத்ததும் அதனை **கனேடிய காவல்துறை தகவல் நிலையத்தில்** (Canadian Police Information Centre – CPIC) பதிவு செய்து கொள்ளுங்கள். குடும்பத் தகராறு சம்பந்தமாக அழைக்கப்பட்டு வீடுகளுக்கு செல்லும் ஒவ்வொரு தடவையும் காவல்துறையினர் CPIC நிலையத்தில் உள்ள தகவலினைப் பார்க்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*உங்கள் துர்ப்பிரயோக நபர் இந்தச் சமாதானக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்காவிடின் என்ன நிகழும்?*

உங்கள் துர்ப்பிரயோக நபர் சமாதானக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தை மீறி நடந்தால், பொலிஸ் காவல்துறையினரை தொலைபேசியில் அழையுங்கள். **சமாதானக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் மீறப்படுவதை** நீங்கள் அறிவிக்க விரும்புவதாக அவர்களுக்குச் சொல்லுங்கள். பொலிஸ் காவல்துறையினரிடம் அதுபற்றிப் பதிவு ஒன்று இருந்தால் ஒழிய அவர் மீது ஒப்பந்தத்தை மீறியதாக அவர்கள் குற்றம் சுமத்தமாட்டார்கள். சமாதானக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தை CPIC நிலையத்தில் பதிவு செய்வது இக்காரணத்தால் முக்கியமான ஒன்றாக அமைகிறது.

*நீங்கள் பிரெஞ்சு மொழி பேசும் ஒரு பெண்ணாக ஒன்ராறியோவில் வாழ்ந்து வருகிறீர்கள் என்றால் குடும்பச் சட்ட நீதிமன்ற நடைமுறைகளின் பொழுது பிரெஞ்சு மொழியில் சேவைகளைப் பெறுகின்ற உரிமை உங்களுக்கு உண்டு. உங்கள் உரிமைகள் பற்றி நீங்கள் மேலதிக தகவல் பெறுவதற்கு ஒரு சட்டத்தரணி அல்லது ஒரு சமூக சட்ட உதவி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்: அல்லது பெமெயிட் (Femaide) என்று அழைக்கப்படும் ஆதாரத் தொலைபேசி இணைப்புடன் 1-877-336-2433 என்ற எண்ணிலும், செவிப்புலன் குறைந்தவர்கள் அதன் 1-866-860-7082 என்ற எண்ணிலும், தொடர்பு கொள்ளலாம். பிரெஞ்சு மொழியில் சேவைகள் பெறுவது எப்படி என்பது பற்றிய மேலதிக தகவலினை www.onefamilylaw.ca அல்லது www.undroitdefamille.ca. என்ற எங்கள் இணையத்தளத்திலும் நீங்கள் பார்க்க முடியும்.*

## பெறக்கூடியதாக உள்ள குடும்பச் சட்ட விடயங்களின் தலைப்புகள்*

1. மாற்றுமுறைச் சர்ச்சைத் தீர்வும் குடும்பச் சட்டமும் (TML 001)
2. பிள்ளைப் பாதுகாப்பும் குடும்பச் சட்டமும் (TML 002)
3. பிள்ளை ஆதார உதவித் தொகை (TML 003)
4. **குற்றவியல் மற்றும் குடும்பச் சட்டம் (TML 004)**
5. பிள்ளைக்கான கட்டுக்காப்பும் அணுகல் உரிமையும் (TML 005)
6. குடும்பச் சார்பு உடன்படிக்கைகள் (TML 006)
7. குடும்பச் சட்டச் சமரசம (TML 007)
8. குடிவரவாளர்களாக, அகதிகளாக, மற்றும் குடிவரவு அந்தஸ்து இல்லாதவர்களாக உள்ள பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பச் சட்டப் பிரச்சினைகள் (TML 008)
9. குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல் (TML 009)
10. குடும்பச் சட்டத்தில் சொத்து எவ்வாறு பிரிக்கப்படுகிறது (TML 010)
11. திருமணமும் விவாகரத்தும் (TML 011)
12. வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை (TML 012)

* *இந்த சிறுநூல் பல வடிவங்களிலும் பல மொழிகளிலும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற இணையத் தளத்தைப் பாருங்கள். உங்கள் குடும்பச் சட்ட உரிமைகளை நீங்கள் புரிந்து கொள்வதற்கு உதவும் வகையில் இந்த இணையத் தளத்திலும் மேலதிக விடயங்களை நீங்கள் காண முடியும்.*

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

Funded by: / Financé par :
Ontario

இவ் வெளியீடுகளில் தெரிவிக்கப்பட்டு இருக்கும் கருத்துக்கள் பெண்களுக்கான குடும்பச் சட்டக் கல்வி (FLEW) அமைப்பின் கருத்துக்களேயன்றி அவை மாகாண அரசின் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றன எனக் கருத முடியாது.